சின்னச் சின்னதாய்...

விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கோரி சாலை மறியல்

● அரியலூர்

அரியலூர் மாவட்டம் புதுப்பாளையம் கிராமத்தில் மே 13–ம் தேதி, லாரி புகுந்து வீடு இடிந்த விபத்தில், அந்த வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பெண் மற்றும் அவரது 3 குழந்தைகள் காயமடைந்தனர். இவர்கள் 4 பேரும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட இக்குடும்பத்தினருக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி, அவர்களது உறவினர்கள், கிராம மக்கள், திருச்சி–சிதம்பரம் தேசிய நெடுஞ்சாலையில் புதுப்பாளையம் கிராமத்தில் நேற்று சாலை மறியலில் ஈடுபட்டனர்.

தகவலறிந்து கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன் மற்றும் அரியலூர் போலீஸார் சென்று உரிய நடவடிக்கை எடுப்பதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் உறுதி அளித்தனர். இதையடுத்து, மறியல் முடித்துக் கொள்ளப்பட்டது.

குடுமியான்மலை அருகே மக்கள் காத்திருப்பு போராட்டம்

● புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை அருகே நிலையப்பட்டி பொதுமக்கள் நேற்று காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குடுமியான்மலை அருகே வயலோகம் முத்து மாரியம்மன் கோயிலில் ஆண்டுதோறும் வைகாசி திருவிழா நடைபெறும். இங்கு நடைபெறும் பூச்சொரிதலுக்கு நிலையப்பட்டி மக்கள் ஓரிடத்தில் ஒன்றுகூடி, அங்கிருந்து பூத்தட்டுகளை எடுத்துச் செல்வது வழக்கம்.

இந்நிலையில், அனைவரும் ஒன்றுகூடும் இடத்தின் உரிமை மீதான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், அங்கிருந்து பூச்சொரிதலுக்கு யாரும் புறப்படக் கூடாது என இலுப்பூர் கோட்டாட்சியரிடம் அண்மையில் ஒருவர் மனு அளித்தார்.

இதுகுறித்து வருவாய்த் துறை அலுவலர்கள் விசாரணை நடத்தி, அந்த இடத்தில் இருந்து பூச்சொரிதல் விழாவுக்கு புறப்படக் கூடாது என உத்தரவிட்டனர். இதைக் கண்டித்தும், வழக்கமான நடைமுறையை நிகழாண்டும் கடைப்பிடிக்க அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தியும் குடுமியான்மலை அண்ணா பண்ணை அருகே நிலையப்பட்டி மக்கள் நேற்று காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். தகவலறிந்து இலுப்பூர் வட்டாட்சியர் சூரியபிரபு, காவல் துணைக் கண்காணிப்பாளர் முத்துராஜா ஆகியோர் சென்று, வழக்கமான நடைமுறையைப் பின்பற்றலாம் என கிராம மக்களிடம் தெரிவித்தனர். இதையடுத்து, போராட்டம் முடித்துக் கொள்ளப்பட்டது.

பெரம்பலூர் மாவட்ட நூலகத்தில் டிஎன்பிஎஸ்சி குரூப் 4 மாதிரி போட்டித் தேர்வு

● பெரம்பலூர்

பெரம்பலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில், டிஎன்பிஎஸ்சி குரூப் 1, குரூப் 4 போட்டித் தேர்வு எழுத உள்ளவர்களுக்கான இலவச பயிற்சி வகுப்பு நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் க.கற்பகம் நேற்று பார்வையிட்டார்.

அப்போது, அவர் பேசியது: பெரம்பலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மையத்தில் செயல்பட்டு வரும் தன்னார்வ பயிலும் வட்டம் மூலம் டிஎன்பிஎஸ்சி போட்டித் தேர்வுக்காக இலவச பயிற்சி வகுப்பு, அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெறுகிறது. தொடர்ந்து, மே 21, 24, 27, 30, ஜூன் 1 ஆகிய தேதிகளில் கட்டணமின்றி, முழு பாடங்களுக்கும் மாதிரி தேர்வுகள் நடைபெறவுள்ளன. இந்த மாதிரித் தேர்வுகளில் நேரடியாக கலந்து கொள்ள விரும்புவோர், தங்களது புகைப்படம் மற்றும் போட்டித் தேர்வுக்கு விண்ணப்பித்ததன் நகல் ஆகியவற்றுடன் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகலாம்.

கரூர் ஸ்ரீசங்கரா வித்யாலயா பள்ளியில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களையும், பயிற்றுவித்த ஆசிரியர்களையும் கவுரவித்த பள்ளி நிறுவனர் எஸ்.பழனிச்சாமி, தாளாளர் பி.அசோக் சங்கர், செயலாளர் பி.ஆனந்த் சங்கர், பள்ளி முதல்வர் பி.வி.எம்.காமேஸ்வரராவ் உள்ளிட்டோர்.

கரூர் ஸ்ரீசங்கரா வித்யாலயா பள்ளி மாணவர்கள் தேசிய அளவில் சிறப்பிடம்

● கரூர்

கரூர் ஸ்ரீசங்கரா வித்யாலயா பள்ளி மாணவர்கள் 10-ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 சிபிஎஸ்இ பொதுத் தேர்விலும், 2024-ம் ஆண்டுக்கான ஜேஇஇ(மெயின்) தேர்விலும் தேசிய அளவில் சிறப்பிடம் பெற்றதுடன், 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

10-ம் வகுப்பு பொதுத் தேர்வில் மாணவர் கே.எஸ்.குருசரண் 500-க்கு 496 மதிப்பெண்கள் பெற்று, தேசிய, மாநில, மாவட்ட அளவில் சிறப்பிடம் பெற்றுள்ளார். எம்.ஜி.நவதீப் 494, ஆர்.ஷிவானி 483 மதிப்பெண்கள் பெற்று சிறப்பிடம் பிடித்துள்ளனர். தமிழில் 10, கணிதத்தில் 4 மாணவர்கள் முழு மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். 450-க்கு மேல் 32 மாணவர்களும், 400-க்கு மேல் 83 மாணவர்களும் பெற்றுள்ளனர்.

பிளஸ் 2 சிபிஎஸ்இ பொதுத் தேர்வில் மாணவர் கே.ராகுல் கண்ணா, 500-க்கு 484 மதிப்பெண்கள் பெற்று பள்ளி அளவில் சிறப்பிடம் பெற்றார். மேலும், கே.எஸ்.அருணேஷ் 480, ஆர்.ரோகிணி 471 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். கணினி அறிவியல், உயிரியல் பாடங்களில் தலா ஒருவர் முழு மதிப்பெண்கள் எடுத்துள்ளனர். 450-க்கு மேல் 13 மாணவர்களும், 400-க்கு மேல் 40 மாணவர்களும் பெற்றுள்ளனர்.

2024-ம் ஆண்டுக்கான ஜேஇஇ (மெயின்) தேர்வில் ஏ.ஆர்.சிவி 99.63 சதவீதம், கே.ராகுல் கண்ணா 99.57, கே.எஸ்.அருணேஷ் 99.36, எம்.ராஜ்கவுதம் 98.94, பி.ஆர்.சரண் 97.81, எஸ்.கே.குருகணேஷ் 95.14, எம்.கபில் 94.77, கே.தனுஜ் 94 சதவீதம் பெற்று தேசிய அளவில் சிறப்பிடம் பிடித்துள்ளனர்.

இந்நிலையில், சாதனை படைத்த மாணவ, மாணவிகளையும் மற்றும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் பள்ளி நிறுவனர் எஸ்.பழனிச்சாமி, தாளாளர் பி.அசோக் சங்கர், செயலாளர் பி.ஆனந்த் சங்கர், பள்ளி முதல்வர் பி.வி.எம்.காமேஸ்வரராவ் உள்ளிட்டோர் கவுரவித்தனர்.

3 நாட்களுக்கு மேல் பள்ளிக்கு வராத

மாணவிகள் விவரத்தை தெரிவிக்க வேண்டும்

● தலைமை ஆசிரியர்களுக்கு ஆட்சியர் அறிவுறுத்தல்

● புதுக்கோட்டை

தொடர்ந்து 3 நாட்களுக்கு மேல் பள்ளிக்கு வராத மாணவிகளின் விவரத்தை, வருவாய்த் துறை அலுவலர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் ஐ.எஸ்.மெர்சி ரம்யா அறிவுறுத்தினார்.

புதுக்கோட்டை ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான கூட்டத்தில் பேசிய ஆட்சியர் ஐ.எஸ்.மெர்சி ரம்யா.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 10-ம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வு முடிவுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில், பொதுத் தேர்வில் பள்ளி வாரியான தேர்ச்சி அறிக்கை, பாட வாரியான சராசரி மதிப்பெண், தேர்ச்சி பெறாத மாணவர்கள் எண்ணிக்கை, வருகைப்பதிவு விவரம், தேர்ச்சி பெறாததற்கான காரணங்கள் ஆகியவை குறித்து ஆட்சியர் ஐ.எஸ்.மெர்சி ரம்யா ஆய்வு செய்தார். பின்னர், அவர் பேசியது:

பள்ளிக்கு முறையாக வராத மாணவர்கள் குறித்த விவரத்தை பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் பள்ளி நலனில் அக்கறை உள்ளவர்களின் கவனத்துக்குக் கொண்டு சென்று, சம்பந்தப்பட்ட மாணவர்கள் மீண்டும் பள்ளிக்குச் செல்வதை உறுதி செய்ய வேண்டும். குறிப்பாக, 3 நாட்களுக்கு மேல் பள்ளிக்கு மாணவிகள் வராமல் இருந்தால், அதுகுறித்து வருவாய்த் துறையினருக்கு சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்கள் தெரியப்படுத்த வேண்டும்.

10-ம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாத அனைவரையும், துணைத் தேர்வுக்கு விண்ணப்பிக்கச் செய்து, சிறப்புப் பயிற்சி வகுப்பு மூலம் துணைத் தேர்வில் தேர்ச்சி பெறச் செய்து, பிளஸ் 1 வகுப்பில் சேர வழிகாட்ட வேண்டும் என்றார்.

மேலும், முழு தேர்ச்சி பெற்ற பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு ஆட்சியர் வாழ்த்து தெரிவித்தார். இக்கூட்டத்தில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) எஸ்.முருகேசன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எம்.மஞ்சுளா, மாவட்டக் கல்வி அலுவலர்கள் ரமேஷ் (புதுக்கோட்டை), ராஜேஸ்வரி (அறந்தாங்கி) மற்றும் தலைமை ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

பள்ளபட்டியில் மழைநீருடன் வீடுகளுக்குள் புகுந்த கழிவுநீர்

குடியிருப்புவாசிகள் அவதி

● கரூர்

கரூர் மாவட்டத்தில் கடந்த 2 மாதங்களாக வெப்பம் அதிகமாக இருந்த நிலையில், நேற்று முன்தினம் மாலை முதல் நேற்று அதிகாலை வரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது. இதில், நேற்று காலை 8 மணி நிலவரப்படி அதிகபட்சமாக அரவக்குறிச்சியில் 33.80 மி.மீ. மழை பதிவாகியது.

பள்ளபட்டி பகுதியில் நேற்று முன்தினம் அரை மணி நேரத்துக்கு மேலாக பெய்த கனமழை காரணமாக, பள்ளபட்டி கணக்குப் பிள்ளை தெருவில் முழங்கால் அளவுக்கு மழைநீர் தேங்கியது. தொடர்ந்து, மழைநீருடன் சேர்ந்து குடியிருப்புகளுக்குள் கழிவுநீர் புகுந்ததால், மக்கள் அவதிக்குள்ளாகினர். மேலும், கழிவுநீர் புகுந்ததால் துர்நாற்றம் வீசியது.

இதுகுறித்து அப்பகுதி குடியிருப்புவாசிகள் கூறுகையில், "முறையான வடிகால் வசதி இல்லாததால், மழைக் காலங்களில் மழைநீர் கழிவுநீருடன் கலந்து வீடுகளுக்குள் புகுந்துவிடுகிறது. இதுகுறித்து நகராட்சி நிர்வாகத்திடம் பல முறை புகார் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால், மழை பெய்யும்போதெல்லாம் அவதிப்பட்டு வருகிறோம்" என்றனர்.

பள்ளபட்டி நகராட்சி கணக்குப்பிள்ளைத் தெருவில் தேங்கியிருந்த மழை வெள்ளம்.

புதுகை மாவட்டத்தில் சாலைகளின் தரம் ஆய்வு

● புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த ஆண்டு அமைக்கப்பட்ட சாலைகளின் தரம் குறித்து நெடுஞ்சாலைத் துறை அலுவலர்கள் நேற்று ஆய்வு மேற்கொண்டனர்.

தேசிய நெடுஞ்சாலைத் துறையின் மதுரை கண்காணிப்பு பொறியாளர் ரமேஷ், திருச்சி கோட்டப் பொறியாளர் சேதுபதி ஆகியோர் தலைமையிலான பொறியாளர்கள் இந்த ஆய்வில் ஈடுபட்டனர்.

அப்போது, கடந்த ஓராண்டில் மேற்கொள்ளப்பட்ட சாலைகளின் விவரம், மதிப்பீடு, அவற்றின் தன்மை, பராமரிப்பு, பயன்பாடு ஆகியன குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

பின்னர், புதுக்கோட்டை- திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் இருந்து ரூ.5.45 கோடியில் மேற்கொள்ளப்பட்ட பரவெட்டி வயல் கிராமத்துக்குச் செல்லும் சாலை, ரூ.6.90 கோடியில் மேற்கொள்ளப்பட்ட பெருமாநாடு- கொன்னையூர் சாலை ஆகியவற்றை அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்தனர்.

ஆய்வின்போது, புதுக்கோட்டை நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் வேல்ராஜ், உதவிக் கோட்டப் பொறியாளர்கள் பூபதி, வீரமணி, ரவிச்சந்திரன், இந்துமதி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

ஜெயங்கொண்டம் பேருந்து நிலைய மின்கம்பத்தில் தீ விபத்து

● அரியலூர்

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் பகுதியில் நேற்று மழை பெய்தது. அப்போது, ஜெயங்கொண்டம் பேருந்து நிலையத்தில் திருச்சி, திருப்பூர், அரியலூர் வழித்தட பேருந்துகள் நிறுத்தப்படும் இடத்தில் உள்ள மின்கம்பத்தில் திடீரென தீப்பொறி ஏற்பட்டு எரிந்தது.

இதைக் கண்ட ஓட்டுநர்கள், தங்கள் பேருந்துகளை உடனடியாக அங்கிருந்து வேறு இடத்துக்கு கொண்டு சென்று நிறுத்தினர். தகவலறிந்து மின் ஊழியர்கள் சென்று மின்சாரத்தை நிறுத்தி மின்கம்பத்தில் சீரமைப்புப் பணியில் ஈடுபட்டனர்.

கீரனூர் அருகே தொழிலாளி கொலை

● புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அருகே கிள்ளுக்கோட்டை வன துர்க்கை அம்மன் கோயில் திருவிழாவையொட்டி அம்மன் வீதியுலா நேற்று முன்தினம் அதிகாலை நடைபெற்றது.

அப்போது, பட்டாசு வெடிக்கப்பட்டது தொடர்பாக அதே ஊரைச் சேர்ந்த எல்.சின்னதுரை(45), கே.குமார்(65) ஆகியோர் இடையே தகராறு ஏற்பட்டது. இதில், குமார், இவரது சகோதரர்களான முத்துக்கருப்பன், துரை வெங்கடேஷ், குமாரின் மகன்களான கபில் தேவ், சந்தானபாரதி ஆகியோர் சின்னதுரையைத் தாக்கி, கத்தியால் குத்தியுள்ளனர். இதில் பலத்த காயம் அடைந்த சின்னதுரையை அங்கிருந்தவர்கள் மீட்டு, தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். மருத்துவர்கள் பரிசோதித்து அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்தனர். இதுகுறித்து உடையாளிப்பட்டி போலீஸார் வழக்குப் பதிவு செய்து, கொலையாளிகளை தேடி வந்தனர். இந்நிலையில், குமாரை நேற்று கைது செய்தனர்.

மேட்டூர் அணை நிலவரம்

நீர்மட்டம் ..... 50.09 அடி
நீர் வரத்து ..... 112 கன அடி
நீர் திறப்பு .....1,500 கன அடி
கல்லணையிலிருந்து திறப்பு இல்லை

வரி விளம்பரங்கள்
பொது
சுற்றுலா

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அமைப்பு மற்றும் செயல்படுமுறை, அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர்/ அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளில்/ மேற்கொள்ள நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படப்பிடிப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

KVB கரூர் வைஸ்யா பேங்க் Smart way to bank

கரூர் வைஸ்யா பேங்க் லிட்.,

நகை ஏல அறிவிப்பு

எங்களது வங்கி கிளையில் கீழே குறிப்பிட்டுள்ள நபர்கள் தங்களது நகைகளை அடமானம் வைத்து நகைக்கடன் பெற்று உள்ளனர். நகைக்கடன் அசல் வட்டி கட்டி முடிக்க வேண்டிய கெடு தேதி முடிந்தும் பதிவுத் தபால் மூலம் தகவல் தெரிவித்தும் பதிவுத் தபால் பெற்றுக் கொண்டும் / தபால் பட்டுவாடா ஆகாமலும் நகைகள் இன்று வரை மீட்கப்படாமல் உள்ளது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந்த விளம்பரம் கண்டவுடன் தங்களது நகைகளை **29.05.2024 தேதிக்குள்** மீட்டுக்கொள்ளவும். அவ்வாறு மீட்காவிடில் அந்த நகைகள் அந்தந்த வங்கி கிளையில் வைத்து **29.05.2024 அன்று மாலை 3.00 மணியளவில்** பகிரங்க ஏலம் விடப்படும் என்பதை தெரியபடுத்திக் கொள்கிறோம். ஏலத்தை நிறுத்தி வைக்கவோ ஏலத்தேதியை மாற்றி வைக்கவோ ஒத்தி வைக்கவோ வங்கிக்கு முழு அதிகாரம் உண்டு. கீழே கண்ட நபர்கள் இறந்திருந்தால் இவ்விளம்பரம் சம்பந்தப்பட்ட வாரிசுதாரர்களுக்கும் பொருந்தும். நகைகளை விற்றுக்கிடைக்கும் தொகை அவரவர் நேர்முக, மறைமுக பொறுப்பு கடன்களில் வரவு வைக்கப்படும்.

வ. எண்.	கடன் எண்.	கடன்பெற்றவர் பெயரும், முகவரியும்	கடன் தேதி	கடன் தொகை ரூ.	மொத்த எடை கி.
திருவெறும்பூர் (1624) கிளை					
1	1624917000525140	திரு.நாகராஜ்.S, 2/117/3/74, மேலமுருகூர் அரிசன வீதி, வேங்கூர், திருச்சி – 620 013.	21.03.2022	1,62,000	53

தேதி : 17.05.2024 கிளை மேலாளர், கரூர் வைஸ்யா பேங்க் லிட்.,

HDFC BANK

ஹெச்.டி.எஃப்.சி பேங்க் லிமிடெட்

கிளை : முதல் தளம் ஐ.டி.சி. சென்டர், 760, அண்ணா சாலை, சென்னை – 600 002. CIN L65920MH1994PLC080618 Website : www.hdfcbank.com.

கேட்புத் தொகை அறிவிப்பு

2002 ம் ஆண்டின் செக்யூரடைசேஷன் அண்டு ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்டு என்போர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் சட்டத்தின் பிரிவு 13 (2) மற்றும் 2002 - ம் ஆண்டின் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) ரூல்சின் விதி 3 (1) ன் கீழ் விடுக்கப்படுவது.மேற்படி சட்டத்தின் பிரிவு 13 (12) மற்றும் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) ரூல்சின் விதி எண் 3-ன் கீழ்**ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்** (அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் மாண்புமிகு NCLT- மும்பையால் 17 மார்ச் 2023 தேதியிட்ட உத்தரவின்படி முந்தைய ஹெச்.டி.எஃப்.சி லிமிடெட், ஹெச்.டி.எஃப்சி வங்கி லிமிடெட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது) (ஹெச் டி எஃப் சி) நிறுவனத்தால், அதிகாரம் பெற்ற அதிகாரியாக ஆதரைஸ்டு ஆபீசர் நியமிக்கப்பட்ட கீழே கையொப்பமிட்டுள்ளவர், தனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் கீழ்க்கண்ட பட்டியலில் உள்ள கடனாளர்(கள்) /சட்டப்படியான வாரிசு (கள்) /சட்டப் பிரதிநிதி (கள்) சட்டத்தின் பிரிவு 13 (2) ன் கீழ் கேட்புத் தொகை அறிவிப்பு (டிமாண்ட் நோட்டீஸ்) விடுத்து அதன் மூலம் அவரவர் அறிவிப்பில் கண்ட தொகையினை அதன் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று கோரினார். கீழே கையொப்பமிட்டுள்ளவர் தமக்கு இறுதியாக தெரிந்த கடனாளர்(கள்) /சட்டப்படியான வாரிசு (கள்) /சட்டப் பிரதிநிதி (கள்) -ன் வீட்டு முகவரியில் மேற்கூறிய அறிவிப்புகளின் நகல்களை ஒட்ட வகைசெய்துள்ளார். மேற்கூரிய அறிவிப்புகளின் உண்மை நகல்கள் அவ்வதிகாரியினிடம் உள்ளதால் மேற்சொன்ன கடனாளர்கள் /சட்டப்படியான வாரிசு (கள்) /சட்டப் பிரதிநிதி (கள்) -க்கு அவை தேவை இருப்பின் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் அன்னாரை அணுகி பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கூறிய நிலையில் இந்த கேட்புத்தொகை அறிவிப்பின் மூலம் மேற்படி கடனாளர்(கள்) /சட்டப்படியான வாரிசு (கள்) /சட்டப் பிரதிநிதி (கள்) தாங்கள் எங்களுடன் ஏற்படுத்திக் கொண்ட கடன் ஒப்பந்தம் மற்றும் இதர ஆவணங்கள் மேலும் குறிப்பிட்டுள்ள கடனாளரால் எழுத்து பூர்வமாக உள்ள ஆவணத்தின் அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள தேதி வரையிலான தொகை மற்றும் வட்டியுடனும் இந்த அறிவிக்கை வெளியிட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள், ஹெச் டி எஃப் சி-க்கு செலுத்த வேண்டுமாறு மீண்டும் ஒரு முறை கோரப்படுகிறார். மேலும், கடனை திருப்பிச் செலுத்துதல் தொடர்பாக, கடனாளர்(கள்) /சட்டப்படியான வாரிசு (கள்) /சட்டப் பிரதிநிதி (கள்) அவரவர்களுக்கு நேரே கொடுக்கப்பட்டுள்ள சொத்துக்களை கடன் பாதுகாப்பிற்காக **ஹெச் டி எஃப் சி**–க்கு அடமானம் செய்துள்ளனர்.சட்டத்தின் பிரிவு 13-ன் உட்பிரிவு (8) -ன் படி அடமானம் பெற்ற சொத்தினை கடனாளர்(கள்) மீட்டுக் கொள்வதற்கான கால அளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வரிசை எண்	கடனாளர் பெயர் (கள்)/ சட்டப்படியான வாரிசு (கள்) சட்டப்படியான பிரதிநிதி (கள்) பெயர்கள்	ஈடு பெற்ற சொத்திருப்பு விவரம் (அசையாச் சொத்து) (1 ச.மீ என்பது 10.76 ச.அடிக்கு சமமானது)
1.	**திரு. S. அங்கு அசோக் குமார் (கடனாளர்),** வீட்டு எண். 31, அன்னை வேளாங்கண்ணி நகர், பூலாங்குடி கிராமம், திருச்சிராப் பள்ளி - 630410.	திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் தாலுகா, பூலாங்குடி கிராம எல்லைக்குட்பட்ட அன்னை வேளாங்கண்ணி நகரில் ச.எண். 37/3, உட் - பிரிவு புதிய ச.எண். 37/3A26-ல் 2200 ச.அடி (அ) 204.38 ச.மீ அளவுள்ள மனை எண். 31 மற்றும் அதன் மீது கட்டப்பட்டுள்ள கட்டிடம் உட்பட உள்ள சொத்திற்கான எல்லைகள். வடக்கு : சஞ்சீவியப்பாவுடைய நிலம், தெற்கு : மனை எண். 32, கிழக்கு : மனை எண். 42, மேற்கு : நடைபாதை. அளவுகள் : கிழக்கு மற்றும் மேற்குப் பக்கங்களில் 44 அடி (13.41மீ), தெற்கு மற்றும் வடக்குப் பக்கங்களில் 50 அடி (15.24 மீ). இந்த சொத்தானது திருச்சிராப்பள்ளி மாவட்ட பதிவாளர் அலுவலகம் மற்றும் திருவெறும்பூர் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்டது. **கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி : 19 - மார்ச் - 2024** & **மொத்த கடன் நிலுவைத் தொகை :** 31 - ஆகஸ்ட் - 2022* வரை **ரூ. 29,25,228/-**

* **திரும்ப செலுத்தும் நாள்/சொத்தினை பணமாக்கும் வரையில் மேற்கால வட்டி மற்றும் ஏற்படும் செலவுகள், கட்டணங்களும் சேர்த்து.**
மேற்கூறியபடி ஹெச் டி எஃப் சி க்கு திருப்பிச் செலுத்த தவறும் பட்சத்தில் அந்த கடனாளர்(கள்) /சட்டப்படியான வாரிசு (கள்) /சட்டப் பிரதிநிதி (கள்) ன் மீது இச்சட்டப்பிரிவு 13(4)ன் கீழ் மற்றும் அதற்குப் பொருத்தமான ஏனைய விதிகளின் அடிப்படையில் ஹெச் டி எஃப் சி மூலம் நடவடிக்கை தொடரப்படுவதோடு அதற்குண்டான செலவுகளுக்கும் விளைவுகளுக்கும் கடனாளர்கள் /சட்டப்படியான வாரிசு (கள்)/சட்டப் பிரதிநிதி (கள்) களே பொறுப்பு.
மேற்படி கடனாளர்(கள்) /சட்டப்படியான வாரிசு (கள்) /சட்டப் பிரதிநிதி (கள்) மேலே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை ஹெச் டி எஃப் சி யின் எழுத்து மூல முன்னிசைவு இல்லாமல் கிரையமோ, குத்தகையோ அல்லது வேறு எந்த வகையிலோ உரிமை மாற்றம் செய்ய மேற்படி சட்டம் தடை செய்கிறது. இதை யாதொருவர் மீறினாலோ அல்லது மீறத் தூண்டினாலோ மேற்படி சட்டத்தின்/விதியில் குறிப்பிட்டுள்ளபடி அன்னாருக்கு சிறைத்தண்டனை மற்றும் /அல்லது அபராதம் விதிக்கப்படும்.

தேதி : 17 – மே – 2024 இடம் : சென்னை
பதிவு அலுவலகம் : HDFC பேங்க் ஹவுஸ், சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல் (மேற்கு), மும்பை – 400013
HDFC பேங்க் லிமிடெட்டிற்காக ஒப்பம் அதிகாரம் பெற்ற அதிகாரி

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் (ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071.

கிளை அலுவலகம் : எண். 74, லக்கி லேன் பிளாசா, சாலை ரோடு, தில்லை நகர், திருச்சி-620018.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு"** மற்றும் **"உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **மின் ஏலத்தின் (e-auction)** மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	13.05.2024-ன்படி தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நாள் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்